# பத்திரிகைகளின் தலைப்பு செய்திகளின் கட்டமைப்பு யாழ். பிராந்திய பத்திரிகைகளினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

நித்தியானந்தன் கஜிதரன்,
ஊடகக் கற்கைகள் அலகு, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
nkagitharan27@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இவ் ஆய்வானது பத்திரிகைகளின் தலைப்பு செய்திகளின் கட்டமைப்பு - யாழ் பிராந்திய பத்திரிகைகளினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இன்று மக்களை வழிநடத்துவதிலும், பாதுகாப் பதிலும் ஊடகங்களின் பங்களிப்பு இன்றியமையாதது ஆகும். குறிப்பாக பத்திரிகை ஊடகம் முக்கியமானதும் முதன்மையானதுமான பணிகளை மேற்கொள்கின்றது. பத்திரிகைகளின் தலையாக விளங்கும் தலைமைச் செய்திகள் மக்களின் பிரச்சினைகளை வெளிக்காட்டுவதும் முக்கியமான முதன்மையான செய்திகளை வழங்குவது மாகும். ஒரு ஜனநாயக நாட்டின் நான்காவது தூணாக விளங்கும் சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று துறைகளில் கருத்துக்களை அல்லது தகவல்களை மக்களிற்கு அறியப்படுத்துவதாகவும் அவை தவறிழைக்கும் போது தட்டிக் கேட்பவையாகவும் ஊடகங்கள் விளங்குகின்றன. இதில் பத்திரிகை ஊடகம் முதன்மை பெறுகின்றது. பத்திரிகைகளில் தலைப்பு செய்திகளை எழுதுவதும் ஒரு தனிக் கலையாகும். ஒரு பத்திரிகையின் தலைப்புக்களை வைத்தே அப்பத் திரிகையின் தரத்தை துல்லியமாக மதிப்பிடலாம் என்று நியூயோர்க் சொரல்ரிபியூன் பத்திரிகை பிரதம ஆசிரியர் அலன் மொன்சோம் தெரிவிக்கின்றார். எனவே இவ் ஆய்வானது தலைப்புச் செய்திகளில் எத்த கைய செய்திகள் முதன்மை பெறுகின்றன, செய்தி மூலகங்களின் பயன்பாடு என்பவற்றை அறியும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக உள்ளடக்க ஆய்வு முறையும் நேர்காணல் என்பவற்றின் மூலம் முதன் நிலை தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவ் ஆய்விற்கு தேவையான பிறதரவுகள் புத்தகங்கள் இணையத்தளம் போன்றவற்றில் இருந்து இரண்டாம் நிலைத்தரவுகளும் பெறப்பட்டுள்ளன. இவற்றினை பண்புசார் அளவுசார் தரவுகளாக பிரிக்கப்பட்டு அட்டவணைகள் புள்ளிவிபர ங்கள் ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. யாழ் பிராந் தியப் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் குறிப்பிட்ட காலத்திற்கு எவை பொருத்தப்பாடாக உள்ளதோ அவற் றினை முக்கியத்துவத்தின் அடிப்படையில் வழங்குவ தனையும் தலைப்புச் செய்திகளில் செய்தி மூலகங்களின் கட்டமைப்புக்களைப் பயன்படுத்துவதும் குறிப்பாக தமது நிறுவனத்தின் அரசியல் கொள்கைகளிற்கே ஏற்ப பயன் படுத்துவதும் பெரும்பாலும் வன்செய்திகளையே தலைப் புக்களாக பயன்படுத்துகின்றன என்பதும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

## 1. ஆய்வு அறிமுகம்

தகவலின் ஊடாக நடைபெறும் பரிமாற்றம் தொடர் பாடல் ஆகும். அதாவது ஒரு செய்தி அல்லது தகவல் பரிமாற்றம் தொடர்பாடல் எனலாம். மனிதர்களிடையே கருத்துக்கள் தகவல்களை காவிச்செல்கின்ற தொடர்பாடல் சாதனமாக ஊடகங்கள் காணப்படுகின்றன. காலந்தோறும் தொடர்பாடல் உத்திகளும், தொடர்பாடல் சாதனங்களும் மாற்றமடைந்து வந்துள்ளன. அந்த வகையில் ஊடகங் களின் செயற்பாடும் அவற்றின் முக்கியத்துவமும் மனிதர் களிடையே அளப்பரிய மாற்றத்தை ஏற்படுத்தின. குறிப்பாக வெகுஜன ஊடகங்களின் தோற்றுவாய் மக்களிடம் தகவல் பரப்புதல், தகவல் பரிமாற்றம், தகவலை பதிவு செய்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டது. குறிப்பாக வெகுஜன ஊடகங்களினை, அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம், நவீன ஊடகம் என வகைபிரித்து நோக்குகின்றனர். இதில் அச்சு ஊடக பத்திரிகையே முதன்முதலில் தோற்றம் பெற்ற வெகுஜன ஊடகம் ஆகும். இன்றுவரை உலக நாடுகள் பலவற்றிலும் பிரதானமாக பயன்படுத்துகின்ற சாதனமாக இது காணப்படுகின்றது. அந்த வகையில் இலங்கையிலும்

பத்திரிகை பயன்பாடு அதிகமாக காணப்படுகின்றது. அதனடிப்படையில் பத்திரிகைகளில் வெளியிடப்படும் தலைப்புச் செய்திகள் மிக முக்கியமான தாக்கத்தினை வாசகர்களிடையே ஏற்படுத்துகின்றன. எனவே யாழ் பிராந்திய பத்திரிகைகளினை மையமாக கொண்டு தலைப்புச் செய்திகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன அதன் முக்கியத்துவம் அதில் பயன்படுத்தும் செய்தி மூலங்கள் செய்தி கட்டமைப்பு போன்றவற்றினை அறியும் பொருட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. இலக்கிய மீளாய்வு

பத்திரிகைத்துறை பற்றிய ஆய்வுகள் பத்திரிகைத் துறையின் வளர்ச்சியினை அந் நிறுவனங்களாலும் மற்றும் ஊடகவியல் அமைப்புக்களாலும் ஊடக ஆய் வாளர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவ்வகை யில் மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகள் பின்வருமாறு அமைந்துள்ளது.

“வாசகர் - நிறுவனங்கள் பத்திரிகைகளில் முக்கிய அனுபவங்கள்” நோர்த் வெஸ்ரன் பல்கலைக்கழகம் 2004 இல் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது பத்திரிகை நிறுவனங்கள் பற்றிய வாச கர்களது கருத்தியலை ஆய்வு செய்துள்ளன. இதன்படி செய்திகளை வாசிக்கும் பொழுது அதன் உறுப்பினர்களான வாசகர்களின் உணர்வைத் தூண்டுதல் சமூகத்தினை புரிதல், சமூகப் பணியில் வாசகர் தாம் முக்கிய இடத்தை வகிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துதல், வாசகர் செய்தியை பார்ப்பதன் மூலம் தாம் திறமையானவன் என உணரச்செய்தல் போன்றவற்றை தூண்டக்கூடிய பத்தி ரிகைகளது தலைப்புச் செய்திகள், செய்திகள் அமைய வேண்டுமென வாசகர்கள் எதிர்பார்ப்பதாக இவ் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

“சமூக அரசியல் வளர்ச்சிக்கு ஈழகேசரி ஆற்றிய பங் களிப்பு” க.அருந்தவராஜா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 2003. இவ் ஆய்வானது ஈழகேசரி பத்திரிகை யாழ்ப்பாண சமூகத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணி களையும் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களையும் மையப்படுத்தியதாக காணப்படுகின்றன. அக்கால சமூக த்தின் பிரச்சினைகளிற்கு தீர்வு காண ஈழகேசரி ஆற்றிய பணிகளினை விபரிக்கின்றது. மேலும் ஈழகேசரி ஆசிரியர் பொன்னையா அவர்களின் பத்திரிகை பணி மற்றும் ஆசிரியர் தலையங்கம் தலைப்புக்கள் என்பன தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

றொஸ் ஹவார்ட் “முரண்பாட்டு உணர்திறன் மிக்க ஊடகவியல்” மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 2006 இல் மேற்கொள்ளப்பட்ட சமூகவியல் ஆய்வானது இலங்கையில் ஊடகவியல் துறை மற்றும் பத்திரிகைத்துறை என்பன முரண்பாடு வன்முறை உள்ள பிரதேசத்தில் எவ்வாறு செயற்பட்டு வந்துள்ளன என்பதனை மையமாக கொண்டுள்ளது. முரண்பாடான நிலையில் ஊடகங்கள் தலையீடு செய்யாது விலகுவதனால் என்ன விளைவு சமூகத்தில் கிடைக்கின்றது என்பது தொடர்பாகவும் ஆரா யப்பட்டுள்ளது. குறிப்பாக முரண்பாட்டிற்கு பத்திரிகைத் துறை எவ்வாறான பங்களிப்புக்களை வழங்குகிறது அல்லது முரண்பாட்டிற்கும் ஊடகங்களிற்கும் உள்ள தொடர்புகள் பற்றி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

“இலங்கைப் பத்திரிகைத் துறையின் தோற்றமும் வளர்ச்சியும் சில குறிப்புக்கள்” என்ற கட்டுரையில் தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றம், வளர்ச்சியை ஆண்டு வாரி யாக குறிப்பிட்டு சமயத் தேவையை முதன்மைப்படுத்தி தோன்றிய பத்திரிகைகள் பல்வேறு காலங்களிலும் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் வெளிவந்துள்ளமையையும் சமூகத்தில் விழிப் புணர்வு ஏற்படுத்தும் சாதாரண பத்திரிகைவரை அனுப வரீதியான ஆய்வு முறையில் வளர்ச்சி பெற்றது பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

இவற்றினை அடிப்படையாக கொண்டு பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளின் கட்டமைப்பு – யாழ் பிராந்திய பத்திரிகைகளினை அடிப்படையாக கொண்டு இவ்ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 3. ஆய்வுப் பின்னணியும் நோக்கமும்

யாழ். பிராந்திய பத்திரிகைகளின் சுதந்திரமான சேவைக்கு செயற்பாட்டிற்கு அரசியல் தலையீடுகள் மற்றும் ஆசிரியபீட கொள்கைகள் சவாலாக அமைவதால் தலைப்புச் செய்திகளின் தன்மைகள் மாறுபாடாகவும் மூலங்கள், கட்டமைப்புக்கள் நேர்த்தியற்றதாகவும் உள்ளன. உண் மையை வழங்குவதும் உண்மையாய் செயற்படுவ தும் ஊடகங்களின் பணி ஆகும். செய்தி மூலகங்கள் கட்டமைப்புக்கள் தவறாகும் போது உண்மைத்தன்மை கேள்விக்குறியாகி நடுநிலைமைத் தன்மை குன்றுகின்றது. யாழ் பிராந்தியப் பத்திரிகைகளில் எவ்வளவு தூரம் செய்திப் பெறுமானங்கள் பின்பற்றப்படுகின்றது என்பது ஆராயப்பட வேண்டியதாகும். மேலும் மக்களிற்கு செய்திகளினை ஒரே சீராக செய்திப் பெறுமானத்துடன் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் தலைப்புச் செய்திகள் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழ்ப் பத்திரிகைகளினை பொறுத்தவரையில் உரிய மூலகங்களினூடாக சுதந்திரமானதாகவும் ஜனநாயக ரீதியிலும் உள்ளது. இதனை அடிப்படையாக கொண்டு இவ் ஆய்விற்கான நோக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

- தலைப்புச்செய்திகளாக எத்தகைய செய்திகள் முதன்மை பெறுகின்றன.
- செய்தி மூலகங்களினை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்ற காரணிகள்
- தலைகீழ் பிரமிட்டு முறையில் செய்திகள் பிரசுரிக்கப் படுகின்றதா?
- பிராந்திய பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளின் முக்கியத்துவம் எவ்வாறு உள்ளது.?
- செய்தி விழுமியங்கள் கொள்கைகள் பின்பற்றப்படுகிறதா?

## 4. ஆய்வு முறையியலும் தரவுப் பகுப்பாய்வும்

பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் தொடர்பான ஆய்வு உள்ளடக்க ஆய்வின் பிரதானமாக பயன்படுத் தப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது அளவு சார் ரீதியிலும் பண்புசார் ரீதியிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக முதன்நிலைத் தரவுகளாக பத்திரிகைகள் நேர்காணல் என்பனவும் இரண்டாம் நிலைத் தரவுகளாக ஏற்கனவே செய்யப்பட்ட பத்திரிகை தொடர்பான ஆய்வுகளும் கோட் பாடுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அளவுசார் முறையியல் குறிப்பிட்ட பத்திரிகைகளில் கொடுக்கப்படும் தலைப்பின் அளவுகள், எத்தனை பத்திரி கைகளில் மற்றும் வரிகளில் தலைப்புச் செய்திகள் கொடுக்கப்படுகின்றது, எந்தவகையில் செய்திகள் தலைப் புச் செய்தியாக உள்ளது. என்ன வகையான தலைப்புச் செய்தி வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 5w+1H பயன்படுத்தப்படுகிறதா? முதலான தரவுகள் அளவுகள் மூலமும் புள்ளிவிபரங்கள் மூலமும் மாற்றப்பட்டு பத்தி ரிகை தலைப்புச் செய்திகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

பண்புசார் முறையியலில் பத்திரிகைகளில் பெறப்பட்ட தலைப்புச் செய்திகள் மற்றும் செய்திகளுக்கு இடப்படுகின்ற தலைப்புக்கள், செய்தி மூலங்கள், செய்திக்கட்டமைப்புக்கள் பற்றிய தரவுகளை இவ் ஆய்வு முறையினூடாக ஆராயப் படுகின்றன. யாழ்ப்பாண பிராந்திய தமிழ்ப் பத்திரிகை நிறுவனங்களின் பிரதம ஆசிரியர்களிடம் பெற்றுக் கொள் ளப்பட்ட நேர்காணல் தரவுகளும் பண்புசார் தரவுகளாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

## 5. தரவு சேகரிப்பு முறை

ஆய்வுக்குட்படுத்திய நான்கு பிராந்திய பத்திரி கைகளினதும் ஆறுமாத காலப்பகுதி பத்திரிகைகளை உள்ளடக்கி குறிப்பாக 2012 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கம் 2013 ஆம் ஆண்டு பங்குனி மாதம் வரையிலான பத்திரிகைகளை பெற்று அவற்றில் இருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன. அத்தோடு ஆய்வுக்கு தேவையான வகையில் நேர்காணல் மூலமும் பத்திரிகை தலைப்பு செய்திகள் தொடர்பான உதயன், வலம்புரி, தினக்குரல், தினமுரசு ஆகிய பத்திரிகைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இங்கு தரவு சேகரிப்பில் பத்திரிகை தலைப்புச் செய்திகள், அவற்றின் முக்கியத்துவம், தன்மை, செய்திகளின் அமைப்பு முறை போன்ற ஆய்வுக்கு தேவையான விடயங்கள் கவனம் செலுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 6. பகுப்பாய்வுரை

பத்திரிகைகளின் தலைப்பு செய்திகளின் கட்டமை ப்பு யாழ். பிராந்திய பத்திரிகைகளினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு எனும் ஆய்வுக் கட்டுரையில் 2012.10.01 இல் இருந்து 2013.03.31 வரையான நாட்களில் வெளிவந்த உதயன், வலம்புரி, தினக்குரல், தினமுரசு ஆகிய பத்திரிகைகள் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளதன் அடிப்படையில் யாழ் பிராந்திய பத்திரிகையின் தலைப்புச் செய்திகளில் நாட்டின் அரசியல், சர்வதேச அரசியல் ரீதி யிலான செய்திகளிற்கு அதிக முக்கியத்துவம் அளிப் பதனை காணலாம். மேலும் சமூகம் தொடர்பான தலைப்புச் செய்திகளிற்கு ஓரளவு முக்கியத்துவம் கொடு த்து தலைப்புச் செய்திகள் அமைத்திருப்பதனையும் பொருளாதாரம் தொடர்பான தலைப்புச் செய்திகள் மாத த்தில் ஒரு தடவையாவது பிராந்தியப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதனையும் அவதானிக்கலாம். மேலும் இயற்கை அனர்த்தம் தொடர்பான செய்திகளில் ஆய்வுக் குட்படுத்திய காலத்தில் ஒரு சில செய்திகள் ஊடகங்களில் தலைப்புக்களாக வெளிவந்துள்ளதனை அவதானிக்க லாம். இதனை விட விபத்துக்கள் தொடர்பான தலைப்புச் செய்திகள் மிகக் குறைந்த அளவிலேயே வெளிவருகின் றன. இவை பின்வரும் அட்டவணை மூலமும் வரை பின் மூலமும் காட்டப்படுகின்றது.

**அட்டவணை - 1** யாழ் பிராந்திய பத்திரிகைகளின் ஆறு மாதகால தலைப்புச் செய்திகள்

| இல | பத்திரிகைகள் | 2012.10.01 தொடக்கம் 2013.3.31 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | அரசியல் | சமூகம் | பொருளா தாரம் | இயற்கை அனர்த்தம் | விபத்து |
| 1 | உதயன் | 15 9 | 23 | 2 | 3 | - |
| 2 | வலம்புரி | 15 2 | 20 | 2 | 28 | - |
| 3 | தினக்குரல் | 13 8 | 28 | 5 | 7 | 2 |
| 4 | தினமுரசு | 13 8 | 26 | 3 | 2 | 1 |

மூலம்:- பத்திரிகைகளின் உள்ளடக்க ஆய்வு




**உரு - 1**

இவ்வாய்வின் மூலம் உதயன், வலம்புரி, தினக் குரல், தினமுரசு ஆகியவற்றின் ஆறுமாத கால தலைப்புச் செய்திகளில் மக்களிடம் அதிகளவில் சென்றடைகின்ற செய்திகளாக அரசியல் தலைப்புச் செய்திகளே காணப்படுகின்றன என ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும்இதன்மூலம் உதயன் பத்திரிகை அதிகளவான அரசியல் தலைப்புச் செய்திகளையே பிரசுரிக்கின்றது என்கின்ற முடிவும் அடுத்தபடியாக வலம்புரி அரசியல் ரீதியான தலைப்புச் செய்திகளை பிரசுரிக்கின்றது என்கின்ற முடிவும் பெறப்படுகின்றது. மேலும் பொருளாதாரம் இயற்கையனர்த்தம் விபத்துக்கள் சமூக கலாசார செய்திகளும் கால முக்கியத்துவத்திற்கு ஏற்ப வெளிவருவதும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**அட்டவணை - 2** யாழ் பிராந்திய பத்திரிகைகளின் ஆறு மாதகால வன், மென் தலைப்புச் செய்திகள்

| இல | பத்திரிகை | 2012.10.01 – 2013.03.31 | |
|---|---|---|---|
| | | வன்செய்தி | மென்செய்தி |
| 1 | உதயன் | 149 | 33 |
| 2 | வலம்புரி | 131 | 51 |
| 3 | தினக்குரல் | 160 | 21 |
| 4 | தினமுரசு | 100 | 74 |

மூலம்:- பத்திரிகை உள்ளடக்க ஆய்வு




**உரு-2**

உதயன், வலம்புரி, தினக்குரல், தினமுரசு பத்திரிகைகளின் ஆறுமாதகால வன்செய்தி, மென்செய்தியினை அடிப்படையாக கொண்ட தலைப்புச் செய்தி பற்றி மேற்குறிப்பிட்ட அட்டவணை, வரைபு என்பன காட்டுகின்றது. இதன்மூலம் பிராந்திய பத்திரிகைகள் மென் செய்திகளை காட்டிலும் வன்செய்திகளிற்கே அதிக முக்கியத்துவம் வழங்குகின்றன என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இங்கு வன்தலைப்பு செய்திகள் வாசகர்களினை தாக்கத்திற்கு உள்ளாக்குவதாகவும் படிக்கும் ஆர்வத்தினை தூண்டக்கூடிய விதத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பத்திரிகைகளும் தமது அரசியல் கட்சிகளின் செல்வாக்குக்கு ஏற்ப தலைப்புக்களில் வன், மென் செய்திகளிற்கு முக்கியத்துவமளிக்கின்றன.

**அட்டவணை - 3**

| இல | பத்திரிகைகள் | 2012.10.01-2013.03.31 | | | |
|---|---|---|---|---|---|
| | | உதயன் | வலம்புரி | தினக்குரல் | தினமுரசு |
| 01 | கூற்றுத்தலைப்பு | 37 | 34 | 24 | 23 |
| 02 | கேள்வித்தலைப்பு | 15 | 10 | 07 | 11 |
| 03 | உந்துதலைப்பு | 06 | 07 | 08 | 13 |
| 04 | எதிர் உந்துதலைப்பு | 12 | 09 | 20 | 17 |
| 05 | குறுக்குத்தலைப்பு | 05 | 06 | 07 | - |
| 06 | பனர் தலைப்பு | 15 | 13 | 04 | - |
| 07 | பிரமிட் தலைப்பு | 02 | 01 | - | 04 |
| 08 | நெற்றித்தலைப்பு | - | 03 | 07 | - |
| 09 | அடுக்குத்தலைப்பு | 84 | 90 | 89 | 100 |
| 10 | மையத்தலைப்பு | 03 | 01 | 01 | 01 |
| 11 | உடுக்குத்தலைப்பு | 01 | 05 | 01 | 06 |
| 12 | தலைகீழ் பிரமிட் தலைப்பு | 01 | - | 01 | 01 |
| 13 | வலப்பக்கம் சார்ந்த தலைப்பு | - | - | 07 | 02 |
| 14 | இடப்பக்கம் சார்ந்த தலைப்பு | - | 1 | 4 | 2 |




**உரு-3**

இதன் மூலம் யாழ் பிராந்திய பத்திரிகைகள் அதிகளவில் அடுக்குத் தலைப்பினையே பயன்படுத்துகின்றன. இங்கு ஏனைய பத்திரிகைகளை காட்டிலும் தினமுரசுப் பத்திரிகை அதிகளவில் அடுக்குத் தலைப்புக்களினை பயன்படுத்துகின்றன. மேலும் பிரமிட், வலப்பக்கம் சார், இடப்பக்கம் சார், மையத்தலைப்புக்களிற்கு குறைந்தளவான முக்கியத்துவமே அளிக்கின்றன. இதனை விட கூற்றுத்தலைப்பு, பனர் தலைப்பு, கேள்வித் தலைப்பு, உந்துதல் தலைப்பு, எதிர் உந்துத்தலைப்பு ஆகிய வகைகளினை பயன்படுத்தி தலைப்புக்களாக பிரசுரிக்கப்பட்டிருப்பதனை காணலாம்.

யாழ் பிராந்திய பத்திரிகைகள் அரசியல் செய்திகளிற்கும், வன்செய்திகளிற்கும் பெரும்பாலும் அடுக்குத் தலைப்புக்களினையே பயன்படுத்துகின்றன. அதிக தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய மொழிகளின் ஊடாக அடுக்குத் தலைப்புக்களை தலைப்புச் செய்திகளில் எழுதப்படுவதனை ஆய்வின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

"மக்களின் வயிற்றில் அடிக்கிறது"

"தமிழ் தேசியக் கூட்டமைப்பு"

(தினமுரசு 23.10.2012)

"13 வது திருத்தம், நீக்குவதற்கான

கருத்துக்கு தமிழ்த்தரப்பு கடும் எதிர்ப்பு"

(தினக்குரல் 16.10.2012)

''பொறுப்புத் தவறியது ஐ.நா.

ஏற்றுக்கொண்டார் பான்.கீ.முன்

சரிவர நிறைவேற்றவில்லை எனக் குற்றச்சாட்டு''

(வலம்புரி 16.11.2012)

''அவசரமாக அமெரிக்கா

விரைந்தார் ஜனாதிபதி''

(உதயன் 23.11.2012)

**அட்டவணை - 4**

| இல | பத்திரிகை | அரச மூலம் | வெளிநாட்டு மூலம் | பொதுமக்கள் மூலம் | அளப்பு நிறுவனம் | மூலம் இல்லாத செய்தி |
|---|---|---|---|---|---|---|
| 01 | உதயன் | 102 | 54 | 17 | 5 | 06 |
| 02 | வலம்புரி | 81 | 73 | 17 | | 04 |
| 03 | தினக்குரல் | 119 | 37 | 16 | 1 | 08 |
| 04 | தினமுரசு | 106 | 40 | 07 | 4 | - |




**உரு-4**

மூலம்:- பத்திரிகை தரவுகள் (உள்ளக ஆய்வு)

பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளில் உண்மை, நம்பகத்தன்மை, நடுவுநிலமையை பேணுவதற்கு செய்தி மூலகங்கள் அவசியமாகும். அதனடிப்படையில் அரச மூலகங்களினையே அதிகளவாக யாழ் பிராந்திய பத்திரிகைகளின் தலைப்பு செய்திகளில் பயன்படுத்துவதனை அறியக்கூடியதாக உள்ளது. உதயன், வலம்புரி போன்ற தலைப்பு செய்திகளில் அதிகளவு தலைப்புச் செய்திகள் தகுந்த செய்தி மூலம் பயன்படுத்தப்படாது பிரசுரிக்கப்படுவதனை ஆய்வு சுட்டுகின்றது. மேலும் தமது நிறுவனம் சார்ந்த கொள்கைகளுக்கு அமைவாக செய்தி மூலகங்களினை பயன்படுத்துகின்றனர் என்பதுவும் இவ் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**அட்டவணை - 5** யாழ் பிராந்திய பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளின் பந்திகளின் எண்ணிக்கை அளவு

| இல | பத்திரிகைகள் | தலைப்புச் செய்திகளின் பந்தி எண்ணிக்கை | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1ம் பந்தி | 2ம் பந்தி | 3ம் பந்தி | 4ம் பந்தி | 5ம் பந்தி | 6ம் பந்தி | |
| 01 | உதயன் | 22 | 52 | 47 | 28 | 19 | 12 | 180 |
| 02 | வலம்புரி | 140 | 18 | 26 | 06 | - | - | 190 |
| 03 | தினக்குரல் | 18 | 29 | 53 | 53 | 29 | - | 182 |
| 04 | தினமுரசு | 16 | 63 | 40 | 25 | 03 | - | 147 |




**உரு-5**

உதயன் பத்திரிகையின் தலைப்புச் செய்திகளில் இரண்டு பத்திரிகைகள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதனை ஆய்வு மூலம் ஆகிய பத்திரிகைகளும் இரண்டு பத்திரிகைகளையே அதிகளவில் தலைப்பு செய்திகளுக்கு பயன்படுத்துகின்றது என்பதுவும் வலம்புரி பத்திரிகையின் தலைப்புச் செய்திகள் அதிகளவில் ஒரு பத்திரிகைகளை முதல் பக்கத்திலும் ஏனைய தொடர்ச்சியை 19 ஆம் பக்கத்திலும் பிரசுரிக்கின்றன என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

## 7. ஆய்வின் முடிவு

பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளை எழுதுவதே ஒரு தனிக் கலையாகும். இவை வாசகர்கள் மனதினைக் கவருகின்ற வகையில் செய்தியினை படிக்கத்தூண்டுவதாகவும் தலைப்புச் செய்திகள் காணப்படும். அந்த வகையில் ''பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் தொடர்பான ஆய்வானது பத்திரிகையில் தலைப்புச் செய்திகளின் முக்கியத்துவம், தலைப்புச் செய்தியின் கரு, எந்த வகைச் செய்திகள், பத்திரிகைகளில் வெளிவருகின்றன. தலைப்புச் செய்தி மூலகங்கள் எவை? என்பது தொடர்பாக ஆராயப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்படுகின்றன.

அதனடிப்படையில் உதயன், வலம்புரி, தினமுரசு, தினக்குரல் எச்செய்தி பிரதானமானதாக காணப்படுகின்றதோ, எச்செய்தி பொருத்தப்பாடு உடையதோ அதன் முக்கியத்துவத்தின் அடிப்படையில் பிரசுரிக்கின்றன. மேலும் இப் பத்திரிகைகள் அரச மூலகங்களினை தலைப்புச் செய்திகளில் பிரயோகிக்கின்றன. எனினும் தாம் சார்ந்துள்ள அரசியல் கட்சி மூலகங்களினையே பெருமளவில் பிரயோகிப்பது ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

மேலும் தலைப்புச் செய்திகளின் தலைப்புக்கள் அவற்றின் வன், மென் செய்தித் தன்மைகளும் அரசியல் கட்சி சார்ந்தே அமைகின்றது. மேலும் தலைப்புச் செய்திகள் அரசாங்கத்தினை விமர்சிப்பதாகவும், அரசுக்கு சார்பானதாகவும் செய்திகள் பிரசுரிப்பதனை ஆய்வின் மூலம் அறியமுடிகின்றது. மேலும் பிராந்தியப் பத்திரிகைகள் அரசியல் செய்திகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றதோ அதேயளவு முக்கியத்துவத்தினை தாம் சார்ந்துள்ள அரசியல் கட்சிகளுக்கும் கொடுக்கின்றன.

மேலும் அடுக்குத் தலைப்பினையே பிராந்திய பத்திரிகைகள் அதிகளவு பயன்படுத்துகின்றன என்கிற முடிவும் வன்செய்திகளுடனான தலைப்புக்களிற்கே பத்திரிகைகள் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன என்பதுவும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

## உசாத்துணை நூல்கள்


- சிவகுருநாதன்.இ., (1993), இலங்கையில் தமிழ் புதினப் பத்திரிகைக்கான வளர்ச்சி 'குமரன் வெளியீடு'
- சிவநேசச்செல்வன்.ஆ,(1997), இலங்கையில் தமிழ்ப் பத்திரிகையின் தோற்றமும் வளர்ச்சியும். அனைத்துலக தமிழர் மன்றம் கொழும்பு,
- சபாரத்தினம்.த, (2009), பத்திரிகையியல் வழிகாட்டி, இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
- லூபன்மரியாம்பிள்ளை., (2005), செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம், 'புனித வளன் கத்தோலிக்க அச்சகம்.
- லூபன் மரியாம்பிள்ளை.,'பத்திரிகையியலுக்கு ஓர் அறிமுகம்' புனித வளன் கத்தோலிக்க அச்சகம்.
- தங்கமணியன் (1998), பத்திரிகையியல். மைசூர் பல்கலைக்கழகம்.
- Nandana Karunanayake., (Ed) (1996) The pressin S Lanka at media publishers.
- இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரமும், இலங்கை சுதந்திர ஊடக இயக்கம், 2007.
- தமிழ்வாணன்,லேனா., (1987), பத்திரிகையுலகத் தர்மங்கள், மணிமேகலை பிரசுரம்.